**வடமத்திய மாகாண சபை - 2017**

---

வடமத்திய மாகாண சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று, அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை வழங்கப்படுகின்றது.

## 1.2 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கேற்பத் தயாரிக்கப்படுதலும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதலும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய போதுமானளவு தவறான கூற்றுக்கள் அற்ற நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடியவாறான அவசியப்படும் உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானிப்பதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான உசிதமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் உசிதமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்வதைப் போன்றே நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தலும் கணக்காய்வில் உள்ளடங்கும்.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வடமத்திய மாகாண சபையினது நிதி, நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமையை நிதிசார் கூற்றுக்கள் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 மாகாண சபை நிதியம்

மீளாய்வாண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் 2018 மார்ச் 31 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

#### 2.2.2 ஏனைய கணக்குகள்

2017 யூலை 31 ஆந் திகதியளவில் மீளாய்வாண்டிற்கான மாகாண சபையின் ஏனைய கணக்குகளைச் சமர்ப்பிப்பதிலான முன்னேற்றம் பின்வருமாறு இருந்தது.

| | | கணக்குகளது மொத்த எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்கு | 31 | 31 |
| (ii) | வருமானக் கணக்கு | 20 | 20 |
| (iii) | மாகாணசபை உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு | 33 | 33 |
| (iv) | வணிக முற்பணக் கணக்கு | 06 | 06 |
| (v) | ஏனைய நிதியக் கணக்கு | 06 | 06 |
| (vi) | சட்டவாக்கக் கணக்கு | 05 | 05 |
| | | 101 | 101 |

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண சபையின் ஆரம்பம் முதல் மீளாய்வாண்டு இறுதிவரையிலும் மாகாண சபை நிதியத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட சகல நடைமுறையல்லாச் சொத்துக்களும், அத்திகதியில் காணப்பட்ட சகல நடைமுறை வேலைகளினதும் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட ரூபா 21,643,314,217 தொகையான மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்களின் ஆரம்ப மீதி, ஆண்டின் போதான சேர்த்தல், ஆண்டின் போதான அகற்றுதல், மீள்மதிப்பீடு, திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் தேறிய பெறுமதி போன்ற தகவல்களை வெளிப்படுத்தாமல் கிரயம் மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் வரியற்ற வருமானத்தின் கீழ் ரூபா 17,341,221 தொகையான பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் மற்றும் உபகரணங்களின் விற்பனை வருமானம் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த சொத்துக்களின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்விற்குத் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனினும், அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் ஒதுக்கீட்டுக் கணக்குகளில் நடைமுறையல்லாச் சொத்துக்களின் அசைவு தொடர்பான அறிக்கையின் பிரகாரம் ரூபா 19,226,118 தொகையான நடைமுறையல்லாச் சொத்துக்கள் அகற்றப்பட்டிருந்தன.

(இ) இரண்டு நிலையான வைப்புக் கணக்குகளுக்குரிய ரூபா 28,882,957 கூட்டுத்தொகையான பெறவேண்டிய முதலீட்டு வட்டி வருமானம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கான 02 முற்பணக் கணக்குகளில் காணப்பட்ட மீதிகளும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட மீதிக்கும் இடையே ரூபா 13,611,198 தொகையான இணக்கமின்மை காணப்பட்டது.

(ஆ) 02 திணைக்களங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மூலதன பொறுப்புக்கள் ரூபா 7,841,822 ஆக இருந்த போதிலும், திணைக்களங்களுக்குரிய ஒதுக்கீட்டுக் கணக்குகளில் அந்த பொறுப்புக்கள் ரூபா 39,385,858 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக ரூபா 31,544,036 இணக்கஞ் செய்யப்படாத வேறுபாடு காணப்பட்டது.

(இ) ஒவ்வொரு அமைச்சு / திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒதுக்கீட்டுக் கணக்குகளில் உட்கட்டமைப்பு, பொறிகள் மற்றும் உபகரணங்கள், காணியும் கட்டிடங்களினதும் ஆரம்ப மீதிகளின் கூட்டுப்பெறுமதி முறையே ரூபா 3,185,604,511 மற்றும் ரூபா 13,577,268,204 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அந்த மீதிகள் முறையே ரூபா 3,294,602,112 மற்றும் ரூபா 3,132,938,265 ஆனமையால் முறையே ரூபா 108,997,601 மற்றும் ரூபா 10,444,329,939 தொகையான வேறுபாடுகள் காணப்பட்டன.

(ஈ) நிதிக்கூற்றுக்களில் உட்கட்டமைப்பு, பொறிகளும் உபகரணங்களும் மற்றும் காணியும் கட்டிடங்களினதும் கூட்டுமொத்த இறுதி மீதி முறையே ரூபா 2,613,215,248 மற்றும் ரூபா 19,030,098,969 ஆக இருந்த போதிலும் ஒவ்வொரு அமைச்சு மற்றும் திணைக்களத்தால்

சமர்ப்பிக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்குகளின் பிரகாரம் அந்த மீதிகள் முறையே ரூபா 3,701,073,643 மற்றும் ரூபா 24,324,341,174 ஆனமையால் முறையே ரூபா 1,087,858,395 மற்றும் ரூபா 5,294,242,205 தொகையான வேறுபாடுகள் காணப்பட்டன.

### 2.2.5 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண சபை உத்தியோகத்தர்களின் 04 முற்பணக் கணக்குகளுக்குரிய ரூபா 1,984,636 செலவு மீதியொன்றும், ரூபா 44,574 வரவு மீதியொன்றும் 08 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரபப்படுவதுடன் அந்த மீதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு போதியளவான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. உரிய மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு மாகாண திறைசேரியால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது ரூபா 87,615 தொகையான பொறுப்பு மீதி மாத்திரம் தீர்க்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கான 06 முற்பணக் கணக்குகளின் கூட்டுப்பெறுமதியான ரூபா 2,129,729 செலவு மீதி மற்றும் 02 வணிக முற்பணக் கணக்குகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 1,150,440 செலவு மீதி ஆகக் காணப்பட்டதுடன் அதில் மாகாண சபை உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகளின் செலவு மீதி 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் கொண்டுவரப்படுகின்றது.

### 2.2.6 கட்டுநிதிக் கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சு / 07 திணைக்களங்களால் தீர்க்கப்படாதிருந்த கட்டுநிதி வரவு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 39,083,855 ஆக இருந்ததுடன் மாகாண சுகாதாரத் திணைக்களத்தால் தீர்க்கப்படாத கட்டுநிதி வரவு மீதி ரூபா 56,293 ஆகும்.

(ஆ) மாகாண அமைச்சுக்கள் / 05 திணைக்களங்களுக்குரிய தீர்க்கப்படாதிருந்த ரூபா 35,380,111 தொகையான கட்டுநிதி வரவு மீதி 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கொண்டுவரப்பட்டிருந்தது. அதில் ரூபா 26,405,861 தொகை பிரதம அமைச்சுக்குரியதாக இருந்ததுடன் அது 08 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய மீதியாகும்.

### 2.2.7 பொது வைப்புக் கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைத் திணைக்களத்தினதும், மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினதும் பொது வைப்புக் கணக்குகளில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுமொத்தம் முறையே ரூபா 603,771 மற்றும் ரூபா 4,542,731 ஆக இருந்தன. அதில் 02 வருடங்களை விஞ்சிய கூட்டுமொத்தம் முறையே ரூபா 128,259 மற்றும் ரூபா 790,689 தொகைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ஏனைய திணைக்களங்கள் மற்றும் வெளித்தரப்பினர்களால் பல்வேறு பணிகளுக்காக வழங்கப்பட்ட முறையே ரூபா 383,702 மற்றும் ரூபா 667,762

தொகைகள் உரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்தப்படாமல் பொது வைப்புக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 29 பிரதேச செயலகங்களினால் தீர்க்கப்படாதுள்ள வைப்பு கணக்கு மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 61,134,053 ஆக இருந்ததுடன் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தை விஞ்சிய மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 814,207 ஆகக் காணப்பட்டது.

**2.2.8 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இன்மை**

**பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண சபையின் 05 நிறுவனங்களுக்கு மீளாய்வாண்டிற்குரியதாக வழங்கப்பட்ட கணிப்பீடு செய்யக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 1,032,458,569 தொகையான 22 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் முன்னைய ஆண்டிற்குரியதாக வழங்கப்பட்ட கணிப்பீடு செய்யக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 980,782 தொகையான 02 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் 2018 ஆகஸ்ட் வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாண உள்ளகக் கணக்காய்வு மற்றும் புலனாய்வுத் திணைக்களத்தால் மாகாண நீர்ப்பாசன பணிப்பாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட 13 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2018 ஆகஸ்ட் வரையிலும் பதிலளிக்கப்படாதிருந்ததுடன் 2017 நவம்பர் 10 ஆந் திகதியின் பின்னர் கணக்காய்வு ஐய வினாப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.9 இணங்காமைகள்**

**2.2.9.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டம் | 4,227,019 | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக அவைத் தலைவர், எதிர்கட்சித் தலைவர், ஆளும் கட்சியின் பிரதான ஒருங்கிணைப்பாளர் மற்றும் எதிர்க்கட்சியின் பிரதான ஒருங்கிணைப்பாளர் போன்ற பதவிகள் ஏற்படுத்தப்பட்டு மாகாண சபையின் உறுப்பினருக்கு உரித்தான வரப்பிரசாதங்களை மிகைத்து வரப்பிரசாதங்கள் அந்த பதவியிலுள்ளவர்களுக்கு வழங்கப்பட்டு 2017 சனவரி 01 ஆந் திகதி முதல் செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் ரூபா |

| | | | |
|---|---|---|---|
| | | | 4,227,019 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் கடந்த 05 வருடங்களுக்குரியதாக அந்த வரப்பிரசாதங்களுக்காக ரூபா 30,007,143 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) | வடமத்திய மாகாண சபையின் நிதி விதிக் கோவை | | |
| | (i) மா.நி.வி 54.4 | - | 03 திணைக்களங்களுக்குரிய 22 வாகனங்களுக்கு மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட 33 விபத்துக்களுக்காக அந்த விபத்து ஏற்பட்டு 04 மாதங்கள் முதல் 03 வருடங்களும் 09 மாத காலமும் கடந்திருந்த போதிலும், ஆரம்ப விசாரணை நடாத்தி பொறுப்பு வாய்ந்தவரைத் தீர்மானித்து உரிய நட்டம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த நட்டங்களின் பெறுமதி காப்புறுதி மேவுகையிலிருந்து மீளளிப்புச் செய்வதற்கும் 2018 யூன் 15 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) மா.நி.வி 169.1 | 727,825 | மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தால் உறுதிப்படுத்தப்படாத 29 உறுதிச் சீட்டுக்களுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| | (iii) மா.நி.வி 259 | 26,550,411 | 2010 ஆம் ஆண்டின் போது குளங்களைப் புனரமைப்பதற்கு பிரதம அமைச்சினால் வழங்கப்பட்ட வேலை ஆரம்பிப்பு முற்பணம் 2017 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iv) மா.நி.வி 283.4 | 196,678 | மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினதும், மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தினதும் வங்கி இணக்கக் கூற்றுக்களில் வழங்கப்பட்டு 06 மாதங்களைக் கடந்த 08 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571(2) | 5,119,243 | மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தால் காலாவதியான 55 வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஈ) | 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 24/2014 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | - | மாகாண சபையின் அமைச்சர்கள் மற்றும் அனைத்து உறுப்பினர்களை உள்ளடக்கிய மாகாண சபையின் 33 உறுப்பினர்களின் |

| | | |
|---|---|---|
| | | பிரத்தியேக பதவியணியினர்களுக்காக 2014 நவம்பர் முதல் 2017 செப்தெம்பர் வரையான காலப்பகுதியில் உள்ளக படியாக ரூபா 27,244,074 தொகை ஆளுநரின் அங்கீகாரத்துடன் செலுத்தப்பட்டிருந்தது. |
| (உ) | 2014 சனவரி 28 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை - | அனுராதபுரம் ஆயுர்வேத வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்ட 23 உத்தியோகத்தர்களுக்கு 05 வருடங்கள் முதல் 32 வருடங்கள் வரையிலான காலவீச்சில் இடமாற்ற நடைமுறை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

### 2.2.9.2 வரித் தேவைப்பாடுகளுக்கு இணங்காமை

2015 யூலை 06 ஆந் திகதிய SEC/2015/05 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் மாதாந்த உழைப்பு ரூபா 62,500 ஐ விஞ்சியிருந்த மாகாண நீர்ப்பாசான, காணி, கிராம அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சினதும், மாகாண கல்வித் திணைக்களத்தினதும், மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தினதும் மற்றும் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினதும் உத்தியோகத்தர்களின் உழைக்கும் போதே செலுத்தும் வரி கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

## 03. வருமான முகாமைத்துவம்

மாகாண சபையினால் மீளாய்வாண்டின் போது 05 வருமானத் தலைப்புக்களுக்குரிய 21 வருமானக் குறியீடுகளின் கீழ் ரூபா 3,661,269,184 தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. அது முன்னைய ஆண்டின் ரூபா 3,553,017,374 தொகையான வருமானத்துடன் ஒப்பிடும் போது 03 சதவீதமான அதாவது ரூபா 108,251,810 தொகையான அதிகரிப்பாகும். அவ்வாறே மீளாய்வாண்டில் 21 வருமானக் குறியீடுகளின் கீழான வருமானம் மாகாண சபையின் மொத்த வருமானத்தில் 16 சதவீதமாக இருந்த போதிலும் முன்னைய ஆண்டின் போது அது 18 சதவீதமாக இருந்தது.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண சபை ஆரம்பித்து 26 வருடங்கள் கடந்திருந்த போதிலும், மாகாண சபையில் அமைந்துள்ள ஈட்டு நிலையங்களை சட்டரீதியாக்கி பதிவு செய்யும் போதும் வருடாந்த அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் போதும் கட்டணம் அறவிடுவதற்குரிய கொள்கை விஞ்ஞானம் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தால் வரி அறவிட வேண்டிய காணியின் அளவு மற்றும் அறவிட வேண்டிய வரிப்பெறுமதி தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய பதிவேடு பேணப்படாதிருந்தமையின் காரணமாக காணி வரி வருமானத்தை சரியாக மதிப்பீடு செய்வதற்கு முடியாதிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் நிலுவை வரி வருமானத்தைக் கணிப்பீடு செய்வதற்கும் முடியாதிருந்தது.

(இ) மதுபான அனுமதிப்பத்திரதாரர்களின் பதிவேடொன்று மாகாண வருமானத் திணைக்களத்தால் தயாரித்து நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை.

## 4. நிதி மீளாய்வு

### 4.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தில் ரூபா 305,268,801 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 980,543,868 ஆகும்.

### 4.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டில் ஏனைய செலவினம், சம்பளம், வேதனம் மற்றும் மானியங்களை உள்ளடக்கிய மொத்தச் செலவினம் ரூபா 541,644,201 இனால் அதிகரித்திருந்த போதிலும், பற்றாக்குறை ரூபா 675,275,069 இனால் குறைவடைந்தமை தொடர்பில் வரிசை அமைச்சிலிருந்தும் திணைக்களங்களிலிருந்தும் கிடைத்த பணம் ரூபா 1,384,789,353 இனாலும் வரி வருமானம் ரூபா 157,968,470 இனாலும் அதிகரித்தமை பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 5. சட்டவாக்கக் கணக்குகள் / நிதியக் கணக்குகள் / வணிக முற்பணக் கணக்குகளும் ஏனைய முற்பணக் கணக்குகளும்

### 5.1 சட்டவாக்க கணக்குகள் / நிதியக் கணக்குகள்

#### 5.1.1 வடமத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சேவையிலிருந்து விலக்கிய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கணக்காளர், பிரதம அமைச்சின் செயலாளரால் பிழையான விடயங்களைக் காண்பித்து மீண்டும் சேவையில் அமர்த்தியிருந்ததுடன் அக் கணக்காளர் தொடர்பாக நடாத்தப்பட்டுக் கொண்டிருந்த ஏனைய முறையான ஒழுக்காற்று பரிசோதனைகளும் அதிகாரசபையில் பதில் கடமையாற்றும் பொது முகாமையாளரால் தமது அதிகாரத்தை விஞ்சி அகற்றப்பட்டிருந்தது. மேலும், அதிகாரசபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பிரதம செயலாளரால் அவருக்கு சலுகை அடிப்படையில் வாகன அனுமதிப்பத்திரமும் மீளாய்வாண்டின் போது மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட நிதிஏற்பாடு இன்றி மீளாய்வாண்டின் போது ரூபா 14,600,772 தொகையான பொறுப்புக்களுக்கு அதிகாரசபை உடன்பட்டிருந்தது.

(இ) அதிகாரசபையினால் 2015 ஒக்தோபர் முதல் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலத்தில் ரூபா 5,357,470 தொகையான பெறுமதி சேர் வரி அறவிடப்பட்டிருந்த போதிலும், அந்தக் காலத்தில் செயற்பாடற்றுக் காணப்பட்ட பெறுமதிசேர் வரிக் கோவையை செயற்படுத்தி அந்த வரியை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அதிகாரசபையினால் பயன்படுத்தப்படுகின்ற ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான ரூபா 95,960,400 தொகையான சொத்துக்கள் அதிகாரசபைக்கு கையேற்று கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) நீண்ட காலமாக முன் கொண்டுவரப்படுகின்ற பெறவேண்டிய 08 கணக்குகளில் ரூபா 23,255,035 தொகையினை அறவிடுவதற்கும் செலுத்த வேண்டிய 02 கணக்குகளின் ரூபா 1,501,250 தொகையினைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5.1.2 வடமத்திய மாகாண அபிவிருத்தி நிர்மாண மற்றும் இயந்திர உபகரண முகவராண்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2003 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 17,518,141 தொகையான பெறுமதி சேர் வரி மற்றும் 1996 இன் 34 ஆம் இலக்க பொருட்கள், சேவைகள் வரிச் சட்டத்தின் பிரகாரம் 1999 ஆம் ஆண்டு முதல் 2000 ஆம் ஆண்டு வரையான காலத்தின் போது சேகரிக்கப்பட்ட ரூபா 8,966,846 தொகையான பொருட்கள், சேவைகள் வரி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ஆதன வரி ரூபா 4,483,123 ஆகக் காணப்பட்டது.

(ஆ) 1990 இன் 11 ஆம் இலக்க வடமத்திய மாகாணத்தின் அபிவிருத்தி நிர்மாண மற்றும் இயந்திர உபகரண முகவராண்மையைத் தாபித்தல் தொடர்பான விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்ட நோக்கங்களினல் கவனத்தில் கொள்ளக்கூடிய அளவு மற்றும் முகவராண்மையின் நல்லாளுகைக்கு உரமூட்டுகின்ற இந்த பணிகளுக்காக பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நிதியமொன்றை ஏற்படுத்துதல் என்ற நோக்கம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 03 வருடங்கள் முதல் 16 வருடங்கள் வரையிலான காலம் இயற்கை அனர்த்தங்களுக்கு உட்பட்டுக் காணப்படுகின்ற முகவராண்மைக்குச் சொந்தமான 19 வாகனங்களைப் பழுதுபார்ப்பதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ 2018 ஏப்ரல் 24 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5.1.3 முன்பள்ளி சிறுவர் கல்வி அபிவிருத்தி அதிகாரசபை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஆம் ஆண்டின் 03 மாதங்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா 3,000,000 தொகையான முன்பள்ளிப் பாடசாலை ஆசிரியர் படிகள் 2017 ஆம் ஆண்டின் போதும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் முன் கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஆ) அதிகாரசபையினால் வெளியிடப்பட்ட செய்திப் பத்திரிகை விற்பனையின் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்காக கிடைக்க வேண்டிய ரூபா 681,172 தொகையை உரிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 நவம்பர் 14 ஆந் திகதி முதல் 2015 மார்ச் 19 ஆந் திகதி வரை முன்பள்ளி சிறுவர் கல்வி அபிவிருத்தி அதிகாரசபையில் சேவையாற்றிய முகாமைத்துவப் பணிப்பாளர் 2014 ஒக்தோபர் மாதத்தில் ஆசிரியர் படி பணம் ரூபா 900,000 தொகையை ஆசிரியருக்குச் செலுத்தாமல் மோசடி செய்திருந்த போது இந்த மோசடி தொடர்பாக முழுமையான பரிசோதனை ஒன்று 2018 ஏப்ரல் 24 ஆந் திகதி வரையிலும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும், கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் மாகாண நிதி விதி 76.1.1 மற்றும் 76.2.1 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது 2015 மார்ச் 19 ஆந் திகதி அவரின் நியமன அதிகாரத்தை இல்லாது செய்திருந்ததுடன் அந்த உத்தியோகத்தரின் பொறுப்பில்

காணப்பட்ட ரூபா 146,898 பெறுமதியான உபகரணங்கள் மற்றும் 03 அலுவலகக் கோவைகள் என்பவற்றை மீளப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5.1.4 மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை**

-----------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அதிகாரசபையின் இலக்கிடப்பட்ட நோக்கங்களை கருத்திற் கொள்ளாது மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம், தொழில் முயற்சியாளர்களை பயிற்சியளித்தல் மற்றும் நிதி ரீதியான கடன் வசதிகளுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் கடன் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அதிகாரசபையில் பதிவு செய்திருந்த தொழில் முயற்சியாளர்களுக்காக ரூபா 3,997,488 பெறுமதியான மூலதன உபகரணங்கள் கையளிக்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் கடனை மீளச் செலுத்தும் கால எல்லை 02 வருடங்கள் முதல் 06 வருடங்கள் வரையிலான காலத்தை கடந்திருந்த போதிலும் அந்தக் கடன் பணத்தில் ரூபா 1,319,860 தொகையை 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு அதிகாரசபைக்கு முடியாதிருந்தது.

(இ) கைத்தொழில் முயற்சியாளர்களின் சங்கத்தை வலுவூட்டும் செயற்திட்டத்தின் கீழ் 02 தொழில் முயற்சியாளர்கள் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 200,000 கடன் தொகையில் 2018 செப்தெம்பர் 30 ஆந் திகதி அளவில் நிலுவையாக இருந்த ரூபா 61,466 தொகையான கடன் தவணைப் பணம் மற்றும் வட்டி என்பவற்றை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கைத்தொழில் கிராம சுழற்சி நிதிய செயற்திட்டத்திற்காக 2016 ஆம் ஆண்டின் போது அதிகாரசபைக்குக் கிடைத்த ரூபா 5.1 மில்லியன் தொகையில் 05 தொழில் முயற்சியாளர் சங்கங்களுக்கு ரூபா 5,099,980 தொகையான கடன் வழங்கப்பட்டிருந்த போதிலும், கடன் பண காப்பீடாக கையொப்பம் இடப்பட்ட உத்தரவாத நோட்டு மாத்திரம் பெறப்பட்டிருந்தது. ஒரு தொழில் முயற்சியாளர் சங்கத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 1,615,000 கடன் தொகையில் உடன்படிக்கையின் பிரகாரம் அறவிட வேண்டிய கடன் தவணைப் பணம் 2017 யூலை மாதத்தின் பின்னர் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**5.1.5 மாகாண பிரதம அமைச்சர் நிதியம்**

------------------------------------------------------------

பிரதம அமைச்சர் நிதியத்திற்கு செலவினத் தலைப்புக்களில் இருந்து நிதியத்தைப் பெற்றுக் கொள்வதற்காக அந்த நிதியத்திற்குரிய கொள்கை விஞ்ஞாபனங்கள் ஊடாக ஏற்பாடுகள் வழங்கப்படாத போது மீளாய்வாண்டில் செலவின விடயம் ஒன்றின் கீழ் ரூபா 17,500,000 நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது.

## 6. செயற்பாட்டு மீளாய்வு

## 6.1 செயலாற்றல்

### 6.1.1 கல்வி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 ஆம் ஆண்டின் போது மாகாணக் கல்வி திணைக்களத்தால் ஆசிரியர்களுக்கு மேலதிகமாக 322 ஆசிரிய ஆலோசகர்களையும், 72 விடயப் பணிப்பாளர்களும் வட மத்திய மாகாணத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். 2017 ஆம் ஆண்டின் போது உள்ளகப் பயிற்சி நடாத்துவதற்காக கல்வி சார்ந்த அபிவிருத்தி செயற்திட்ட நிதிஏற்பாட்டின் கீழ் ரூபா 26,500,000 தொகையும், மாகாண சபை மற்றும் மத்திய அரசின் நிதிஏற்பாட்டின் கீழ் ரூபா 73,234,107 தொகையும் செலவிடப்பட்டடிருந்தன. எனினும், 2017 ஆம் ஆண்டின் போது க.பொ.த (சா.த) பரீட்சைக்காக தோற்றிய 19,455 மாணவர்களில் 628 மாணவர்கள் சகல பாடங்களிலும் சித்தியடையாதிருந்ததுடன், க.பொ.த (உ.த) பரீட்சைக்காக தோற்றிய 12,130 மாணவர்களுக்கிடையில் 1,188 மாணவர்கள் சகல பாடங்களிலும் சித்தி பெற்றிருக்கவில்லை. அவ்வாறே 5 ஆம் தரத்தில் புலமைப் பரிசில் பரீட்சைக்காகத் தோற்றிய 24,836 மாணவர்களில் 7,358 மாணவர்கள் இரண்டு வினாப்பத்திரங்களுக்காகவும் பெற்றிருந்த மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கை 70 ஐ விட குறைவான மட்டத்தில் காணப்பட்டன.

(ஆ) கல்வி அமைச்சின் 1963/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் கட்டாயக் கல்வி கட்டளையை அமுல்படுத்துதல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) வர்த்தமானியின் 4.2 ஆம் பந்தியின் பிரகாரம் பாடசாலைகளுக்கு சேர்க்கப்படாத, பாடசாலையில் இருந்து இடை விலகலுக்குள்ளாகிய மற்றம் எதிர்பார்த்த அடைவு மட்டத்தைப் பெறாத மாணவர்கள் தொடர்பாக பாடசாலைக் குழு, மேற்பார்வையாளர் குழு, மாகாண கல்வித் திணைக்களத்தின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் மற்றும் மாகாணக் கல்வி பணிப்பாளரினால் சந்தர்ப்பங்களுக்கு இணங்க சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2017 ஆம் ஆண்டின் போது வடமத்திய மாகாணத்தில் இனங்காணப்பட்ட பாடசாலை செல்லாத 363 ஆண் பிள்ளைகளும், 221 பெண் பிள்ளைகளும் ஆக இருந்ததுடன் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி அளவில் ஆண் பிள்ளைகள் 135 பேரும், 67 பெண் பிள்ளைகளும் மாத்திரம் கல்விக்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்தனர். அந்த மாணவர்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பான பூரணமான அறிக்கை ஒன்று பெறப்படாதிருந்ததுடன் பாடசாலைகளுக்கு சேர்க்கப்பட்டு 03 மாதங்களின் பின்னர் பாடசாலை மேற்பார்வைக் குழுவினால் மாகாண கல்விப் பணிப்பாளருக்கு அனுப்ப வேண்டிய முன்னேற்ற அறிக்கை அனுப்பப்பட்டிருக்கவில்லை.

(iii) கட்டாயக் கல்வி கட்டளைகளை அமுல்படுத்தும் செயற்திட்டத்தின் பிரதான அளவீடான எதிர்பார்த்த அடைவு மட்டத்தை அடையாதிருந்த மாணவர்கள் தொடர்பாக எந்த வலயக் கல்வி அலுவலகத்தில் இருந்தும் தகவல்கள் அறிக்கை இடப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 ஆம் ஆண்டில் ரூபா 264,894,898 தொகை மத்திய அரசின் நிதிஏற்பாட்டின் அடிப்படையில் வடமத்திய மாகாணத்தின் பாடசாலைகளில் அமுல்படுத்தப்பட்ட மலசலகூட வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் நிர்மாணங்கள் 2017 ஒக்டோபர் 15 ஆந் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் குறிப்பிடப்பட்ட பௌதீக முன்னேற்றம் அடையப்படாதிருந்ததுடன் விரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(i) Type B இன் கீழ் 208 பாடசாலைகளில் இந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் அதன் பௌதீக முன்னேற்றம் 78 பாடசாலைகளில் 40 சதவீதம் வரையும், 88 பாடசாலைகளில் 40 முதல் 60 சதவீதம் வரையும், 20 பாடசாலைகளில் 60 சதவீதம் முதல் 80 சதவீதம் வரையும் இருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது. 42 பாடசாலைகளில் மாத்திரம் 80 சதவீதம் முதல் 100 சதவீதத்திற்கிடையிலான பௌதீக முன்னேற்றமும் காணப்பட்டது.

(ii) Type G இன் கீழ் 27 பாடசாலைகளில் இந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் அதன் பௌதீக முன்னேற்றம் 25 பாடசாலைகளில் 80 சதவீதத்திற்கு குறைவான மட்டத்தில் காணப்பட்டதுடன் 02 பாடசாலைகளில் மாத்திரம் 80 சதவீதத்திற்கு மேற்பட்ட மட்டத்தில் காணப்பட்டது.

(iii) Type BG இன் கீழ் 46 பாடசாாலைகளில் இந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் அதன் பௌதீக முன்னேற்றம் 35 பாடசாலைகளில் 80 சதவீதத்திற்கு குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் 11 பாடசாலைகளில் மாத்திரம் 80 சதவீதத்திற்கு மேற்பட்ட மட்டத்தில் காணப்பட்டது.

(ஈ) 2016/2017 ஆம் ஆண்டின் போது வடமத்திய மாகாண பாடசாலைகளில் சிங்களம் / தமிழ் மொழி மூல கணிதம், ஆங்கிலம் போன்ற பாடங்களில் ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவையின் 3 வகுப்பு 1(அ) தரத்திற்கு சேர்க்கப்பட்டிருந்த 68 பட்டதாரிகளின் பட்டம் உரிய பாடங்களின் மேவுகை 30 சதவீதத்தையும் விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் மாகாணத்தில் தகைமையுடன் உள்ள பட்டதாரிகள் போதியளவில் இல்லாதிருந்தமை இதற்கான காரணமாக இருந்தது.

**6.1.2 சுகாதாரம்**

-----------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 ஆம் ஆண்டில் 1,120 அளவான தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் 12 சதவீதத்தினாலும், 20 சதவீதத்தினாலும் குறைப்பதற்கு இலக்கிடப்பட்ட போதிலும், ஒட்டுமொத்த நோயாளர்களின் எண்ணிக்கை உரிய 02 ஆண்டுகளில் முறையே 9.5 சதவீதத்தாலும் 95 சதவீதத்தாலும் அதிகரித்திருந்தது.

(ஆ) 2017 ஆம் ஆண்டின் வருடாந்த திட்டத்தின் பிரகாரம் புதிய தொற்று நோயாளர்களின் அளவு 40 ஐ விட குறைவாகவும், டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 182 ஐ விட

குறைவாகவும், லிஸ்மனய்சிஸ் நோயாளர்களின் எண்ணிக்கை 67 ஐ விடவும் குறைவாகவும் காணப்பட வேண்டியிருந்த போதிலும் உள்ளபடியான நோயாளர்களின் எண்ணிக்கை முறையே 46, 1086 மற்றும் 182 ஆகக் காணப்பட்டன.

### 6.1.3 ஏனையவை

------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தால் 2017 ஆம் ஆண்டில் லியசவிய செயற்திட்டத்தின் கீழ் 03 தையல் பயிற்சி பாடநெறி அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்கான வளப் பங்களிப்பு படியாக ரூபா 1,824,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், அந்த 03 பாடநெறிகளுக்காக சேர்க்கப்பட்டிருந்த முறையே 485, 460, 35 எண்ணிக்கையிலான மாணவர்களுக்கிடையில் பாடநெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களின் எண்ணிக்கை முறையே 264, 280 மற்றும் 13 மாத்திரமாக இருந்ததுடன் பரீட்சைக்குத் தோற்றிய அந்த மாணவர்களில் 40 சதவீதமானர்கள் பரீட்சையில் சித்தியடைந்திருக்கவில்லை.

(ஆ) மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தால் வடமத்திய மாகாணத்தில் 29 பிரதேச செயலகப் பிரிவில் ஸ்தாபிக்கப்பட்ட 838 கிராம அபிவிருத்தி சங்கங்களில் 308 சங்கங்கள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் செயற்பாடற்றுக் காணப்பட்டது. எனினும், அவற்றை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் வீதித் திணைக்களத்தால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் 2014 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை 18 சிறு கிராமங்களை தாபிப்பதற்காக ரூபா 15,777,003 தொகையைச் செலவிட்டிருந்தது. அந்த 18 சிறிய கிராமங்களில் 02 கிராமங்கள் 2017 திசெம்பர் வரையிலும் செயற்பாடற்ற மட்டத்தில் காணப்பட்டதுடன், 2014 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது பயிற்சியளிக்கப்பட்ட 188 நலனாளிகளுக்கிடையே 84 பேர் இந்த நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து நீங்கியிருந்தனர். இந்த செயற்திட்டத்திற்குரிய வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படாமையினால் செயல்முன்னேற்றத்தை பரீட்சிக்க முடியாதிருந்தது.

(ஈ) 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான கல்வியாண்டுகளின் போது தச்சு வேலை பாடசாலைகளுக்காக 700 மாணவர்களைச் சேகரிக்கும் இயலுமை காணப்பட்ட போதிலும், மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தால் 217 மாணவர்கள் மாத்திரமே சேர்க்கப்பட்டிருந்தனர். அந்தக் காலப்பகுதியில் மாணவர்கள் சேர்க்கப்படாதிருந்த தச்சு வேலைப் பாடசாலைகளின் எண்ணிக்கை 07 ஆக இருந்ததுடன், சேர்த்துக் கொள்ளப்பட்ட 217 மாணவர்களில் 87 மாணவர்கள் பாடநெறியைப் பூர்த்தி செய்யாமல் கைவிட்டுச் சென்றிருந்தனர். அவ்வாறு தச்சு வேலை பாடசாலைகளில் வெற்றிகரமாக பாடநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்கள் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகளைச் செய்யும் வேலைத்திட்டமொன்று திணைக்களத்தால் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) 2012 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை மலிவான கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தினால் ஆடைக் கைத்தொழில் நிலையங்களுக்காக 552 மாணவர்கள் சேர்க்கப்பட்டிருந்த போதிலும், அதில் 259 மாணவர்கள் பாடநெறியைக் கைவிட்டுச் சென்றிருந்தனர். 2017 ஆம் ஆண்டின் போது மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படாத ஆடைக் கைத்தொழில் நிலையங்களின் எண்ணிக்கை 28 ஆகக் காணப்பட்டது. அவ்வாறே 2017 ஆம் ஆண்டில் ஆடைக் கைத்தொழில் உற்பத்தி

விற்பனை வருமானத்தை 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 1,271,618 இனால் வீழ்ச்சியடைந்திருந்தது.

### 6.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

---------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 09 பிரதேச செயலகங்களுக்குரிய மாகாண சபை உத்தியோகத்தர்களுக்காக 09 முற்பணக் கணக்குகளில் காணப்பட்ட ரூபா 1,401,872 தொகையான 07 வரவு மீதிகள் மற்றும் ரூபா 33,157 தொகையான 02 செலவு மீதிகள் என்பன கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறாமல் 02 வருடத்திற்கும் 06 வருடத்திற்கும் இடையிலான காலம் கடந்திருந்த போதிலும், இந்த மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியின் போது மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்திற்கு நன்கொடையாகக் கிடைத்த பெறுமதி உறுதிப்படுத்த முடியாத காகிதாகிகள், பல்வேறு உபகரணங்கள் மற்றும் 30 ஆடை வகைகளுக்குரிய 4,584 பொருள் அலகுகள் என்பன 2017 திசெம்பர் வரையிலும் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) மாகாண கல்வித் திணைக்களத்தின் 12 ஆசிரியர்களால் 2017 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட விடுமுறை அளவை மிகைத்து 465 சம்பளமற்ற விடுமுறைகள் பெறப்பட்டிருந்த போதிலும் அந்த சம்பளமற்ற விடுமுறைகளுக்காக கழிப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஆயுர்வேத திணைக்களத்தால் பேணப்படுகின்ற 45 ஏக்கர் 02 றூட் 15 பேர்ச் அளவிலான மூலிகைத் தோட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு போதியளவான தொழிலாளர்கள் அங்கீகரிக்கப்படாமையின் காரணமாக அவற்றை பராமரித்துச் செல்லல் வரையறுக்கப்பட்டிருந்ததுடன் திணைக்களத்தின் செயற்பாடுகள் நடாத்திச் செல்லப்படுகின்ற வைத்தியசாலை, மத்திய மருந்தகங்கள் மற்றும் மூலிகைத் தோட்டத்துடனான 86 ஏக்கருக்கு மேற்பட்ட காணியை திணைக்களத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சிகிச்சைகளுக்காக மருந்துகளைப் பயன்படுத்தியதன் பின்னர் அகற்றப்படுகின்ற வெற்றுக் கண்ணாடிப் போத்தல்கள் ஆயுர்வேத வைத்தியசாலைக் காணியில் திறந்த வெளியில் வீசப்பட்டிருந்ததுடன் அந்த போத்தல்களை அகற்றுவதற்கோ அல்லது மீண்டும் பயன்படுத்துவதற்கோ ஏற்ற வகையில் சரி செய்வதற்கு முறையான திட்டமொன்று ஆயுர்வேத வைத்தியசாலையினால் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ஆயுர்வேத மருந்துகளின் விலை உயர்வடைந்தமை, நிதிஏற்பாடுகள் போதியளவில் இன்மை, சில மருந்துகளின் இறக்குமதி வரையறுக்கப்பட்டமை, உலர்ந்த மருந்துகள் குறித்த காலத்தில் கிடைக்கப்பெறாமை மற்றும் போதியளவில் கிடைக்கப்பெறாமை போன்ற விடயங்களின் காரணமாக வைத்தியசாலைகளில் அத்தியாவசிய மருந்து வகைகளில் அதிக பற்றாக்குறை ஒன்று வருடம் முழுவதும் காணப்பட்டதுடன் அதனால் நோயாளிகளுக்கு அந்த மருந்துகளை வெளியிலிருந்து கொள்வனவு செய்ய வேண்டி இருந்தது. மேலும், இந்தப் பிரச்சினைகளினால் ஆயுர்வேத சிகிச்சை தொடர்பில் அக்கறை உள்ள மக்களுக்கு நலன்களை சரியான பிரகாரம் வழங்குவதற்கும் முடியாதிருந்தது.

(எ) ஆயுர்வேத வைத்தியத்துறை மற்றும் சத்திரசிகிச்சை வைத்திய பட்டத்தினை பெற்றுள்ள ஆயுர்வேத வைத்தியசாலைகளிலும், மத்திய மருந்தகங்களிலும் சேவையாற்றுகின்ற வைத்தியர்களின் அறிவை பயன்பாட்டிற்கு எடுத்து நோயாளிகளுக்கு சலுவை வழங்குவதற்கான சந்தர்ப்பம் அந்த நிறுவனங்களில் Pressure meter, E.N.T Set போன்ற அடிப்படை உபகரணங்கள் மற்றும் ஆய்வுகூட வசதிகள் இல்லாமையின் காரணமாக உரித்தற்றிருந்தது.

(ஏ) பாரம்பரிய வைத்தியர்களை பயிற்றுவிக்கும் நோக்கில் கால திவுல்வெவ ஆயுர்வேத வைத்தியசாலை வளவில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த பயிற்சி நிலையம் 02 வருடங்கள் அளவிலான காலம் கடந்திருந்தும் பாவனைக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மன்னம்பிட்டிய வைத்தியசாலையின் புதிய வாட்டுக் கட்டிடத் தொகுதி ரூபா 7,983,782 செலவில் 2017 யூலை 22 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அதில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாக அது 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நோயாளிகளுக்காகத் திறக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.3 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்

--------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ''லங்கம் பாசல ஹொந்தம பாசல'' செயற்திட்டத்தின் கீழ் மத்திய அரசின் கல்வி அமைச்சிலிருந்து கிடைக்கப்பெற்ற கட்டுநிதி ரூபா 1,644,000,000 ஆக இருந்த போதிலும் ரூபா 1,956,734,245 தொகை வரை மாகாண சபையினால் செலவிடப்பட்டிருந்தமையால் கட்டுநிதி ரூபா 312,734,245 இனால் விஞ்சி இருந்தது.

(ஆ) மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தால் பெறுகைகள் திட்டம், முறையான செயல்நடவடிக்கைத் திட்டம், கட்டுநிதித் திட்டம் மற்றும் மனிதவள முகாமைத்துவ திட்டம் என்பன சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டில் ரூபா 10,298,729 தொகையான நிதியேற்பாடு சேமிக்கப்பட்டமை தொடர்பாக காண்பிக்கப்பட்ட காரணங்களை ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(இ) மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கிராம அபிவிருத்தி தரவு முறைமையை வடிவமைத்தல் 2017 நவம்பர் 20 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 1,488,500 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும், 2018 பெப்ரவரி 06 ஆந் திகதி வரையிலும் அந்தத் தரவு முறைமை ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2015 ஆம் ஆண்டில் கழக்கு நுவரகம் பலாத்த கல்வி கோட்டத்தில் எஞ்சி இருந்த 1,971 சீருடைத் துணி பக்கற்றுக்கள் அனுராதபுரம் வலய கல்வி அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் 2017 யூலை அளவில் அந்தச் சீருடைத் துணிகளில் 425 பக்கற்றுக்கள் பற்றாக்குறையாக காணப்பட்டது. அவ்வாறே அனுராதபுரம் கல்வி வலயத்தின் பாடசாலைகளில் மாணவர்களுக்கு 2015 ஆம் ஆண்டின் சீருடைத் துணிகள் வழங்கியதன் பின்னர் எஞ்சிய இருந்த 3,903 துணிப் பக்கற்றுக்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அனுராதபுர வலய கல்வி அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(உ) கெக்கிராவ கல்வி வலயத்தில் 50 பாடசாலைகளுக்குரிய 85 கட்டிடங்கள் உடைத்து அகற்றப்பட்ட வேண்டிய நிலையில் காணப்பட்டமை இனங்காணப்பட்டிருந்த போதும் அந்தக் கட்டிடங்களை அகற்றுதல் தொடர்பான செயல்முன்னேற்றம் மற்றும் அதற்குரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2013 ஆம் ஆண்டில் அம்பாறையில் நடைபெற்ற தெயட்ட கிருள (தேசத்திற்கு மகுடம்) கண்காட்சியின் செயற்பாடுகளுக்காக மாகாண விவசாய அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்கப்பட்ட ரூபா 100,000 தொகையான செயல் நிமித்த முற்பணத்தில் மோசடியாகப் பெறப்பட்ட ரூபா 72,000 தொகை ஆரம்ப விசாரணையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விடயங்களைக் கவனத்தில் கொண்டு அதற்குரிய செயல் நடவடிக்கையின் ஆரம்பப்படி முறையாக விவசாய அமைச்சின் செயலாளருக்கு ஒரே தடவையில் செலுத்துமாறு 2017 செப்தெம்பர் 01 ஆந் திகதிய கடிதத்தில் பிரதம செயலாளரால் கட்டளையிடப்பட்டிருந்தது. எனினும், அந்த உத்தியோகத்தரால் அந்தப் பணம் 2018 செப்தெம்பர் 03 ஆந் திகதியே செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு அதில் மோசடி செய்த உத்தியோகத்தருக்கு எதிராக வேறு எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) சுகாதார மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சின் நிதிஏற்பாட்டின் கீழ் அமுல்படுத்தப்பட்ட விசர்நாய் தடுப்பு நடவடிக்கைகளுக்காக 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை மாத்திரம் ரூபா 157,204,050 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் விசர்நாய் கடிப்பதனால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டில் 23 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் நீர் எதிர்ப்பு நோய் மூலம் ஏற்பட்ட மரணங்களின் எண்ணிக்கை இருமடங்காக இருந்தது.

(ஏ) 2006 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலத்தில் ரூபா 47,297,258 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட மதவாச்சி பொருளாதார நிலையம் 2017 ஆகஸ்ட் 04 ஆந் திகதி திறக்கப்பட்டிருந்த போதிலும் 2018 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையில் திறக்கப்பட்ட 28 கடைகளில் 20 கடைகள் மூடப்பட்டிருந்தது. திறக்கப்பட்ட 13 கடைகளுக்குரிய உடன்படிக்கையில் கைச்சாத்திடும் போது வாடகையாளர்களினால் செலுத்த வேண்டிய தொகையில் 1/3 தொகை அதாவது ரூபா 7,381,166 தொகை 2018 மார்ச் 06 ஆந் திகதி வரையிலும் அறவிடப்படாதிருந்ததுடன் திறக்கப்பட்ட 28 கடைகளுக்குரிய 2018 பெப்ரவரி 06 ஆந் திகதியில் நிலுவை வாடகை ரூபா 314,500 ஆகும். ரூபா 8,500 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்ட மாதாந்த கடை வாடகை 2017 ஆம் ஆண்டு முதல் எதிர்வரும் 02 வருடங்களை ஈடுசெய்யப்படும் என பிரதான மதிப்பீட்டாளர் ஆலோசனை வழங்கி இருந்த போதும் பிரதம அமைச்சினால் கடை வாடகை 05 வருடங்களுக்கு ஒரு தடவை திருத்தம் செய்யப்படுமென வாடகை உடன்படிக்கையில் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 6.4 நிதியத்தின் குறைவான பயன்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண நீர்ப்பாசனம், காணி, கிராம அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சின் 02 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 124,106,807 தொகையான மொத்தத் தேறிய நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மாகாண குறித்தொதுக்க அபிவிருத்தி மானியம் மற்றும் இரண்டாம் நிலை சுகாதாரம் சார்ந்த அபிவிருத்தி செயற்திட்டத்தின் (SHSDP) கீழ் வழங்கப்பட்ட ரூபா 1,157,234,110

தொகையான நிதிஏற்பாடுகளில் 50 சதவீதத்திற்கு அண்ணளவான தொகையொன்று பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 6.5 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் களஞ்சியத்திற்கு 2017 மே 16 ஆந் திகதி கிடைக்கப்பெற்ற செவிப்புல உபகரணங்களின் 17 விடயங்கள் 2018 பெப்ரவரி 22 ஆந் திகதி வரையிலும் களஞ்சியத்தில் காணப்பட்டதுடன் 2016 ஆம் ஆண்டில் கிடைத்த 63 செவிப்புல உபகரணங்களின் கோரிக்கைக்காக அந்த உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வட மத்திய மாகாண பாடசாலைகளில் 1,491 ஆசிரியர் விடுதிகள் காணப்பட்டதுடன் அதில் 830 ஆசிரியர் விடுதிகள் விளைவற்றுக் காணப்பட்டன. 1,040 ஆசிரியர் விடுதிகள் திருத்தக்கூடிய நிலையில் காணப்பட்டதுடன் மாகாண கல்வித் திணைக்களத்தால் அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 09 அறைகளையுடைய இரண்டு மாடிக் கட்டிடத்தில் நடாத்தப்பட்ட கெக்கிராவ ஆசிரியர் நிலையத்தின் முதலாவது மாடியின் 04 அறைகள் ஆக்கபூர்வமான பணிகளில் பயன்படுத்தாமல் உடைந்த உபகரணங்களை களஞ்சியப்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆசிரியர்கள் நிலையத்தில் உள்ள 500 லீற்றர் மற்றும் 1000 லீற்றர் கொள்ளளவுடைய இரண்டு பிளாஸ்டிக் தண்ணீர் தாங்கிகள் பாவனைக்கு எடுக்காமல் காணப்பட்டது.

(ஈ) 2016 ஆம் ஆண்டின் போது தெரிவு செய்யப்பட்ட நகர மற்றும் உப நகரங்களின் சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் அழகுபடுத்தல் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 1,787,819 தொகை செலவில் தமுத்தேகம பேரூந்து நிலையத்தில் நிர்மாணிக்கப்பட்ட முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்ட மலசலகூட முறைமை 2017 சனவரி 18 ஆந் திகதி தலாவ பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதும், அது 2018 யூலை 31 ஆந் திகதி வரையிலும், பொதுமக்களின் பாவனைக்காக திறக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சுகாதார மற்றும் சுதேச வைத்திய துறை அமைச்சின் நிதிஏற்பாடு மற்றும் வடமத்திய மாகாண சபையின் நிதிஏற்பாடு என்பவற்றின் அடிப்படையில் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தால் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 84.5 மில்லியன் பெறுமதியான 09 கட்டிடங்கள், ரூபா 13.9 மில்லியன் பெறுமதியான 05 இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் (Dialysis Machine), ஒரு கதிர்வீச்சு (X-Ray) இயந்திரம் மற்றும் ரூபா 1.6 மில்லியன் பெறுமதியான மருந்துகள் என்பன பயனற்றுக் காணப்பட்டன. மேலும், 2017 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 6.9 மில்லியன் பெறுமதியான அலுவலக உபகரணங்கள் மற்றும் மின் உபகரணங்கள் என்பன 2018 யூலை 10 ஆந் திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஊ) அறலகங்வில வைத்தியசாலையில் சிறுநீரக நோய் சிகிச்சை அலகொன்றை ஸ்தாபிப்பதற்காக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட 41 வைத்திய உபகரண அலகுகளுக்குரிய 264 விடயங்கள் சிகிச்சை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமையினால் 2018 யூலை வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது.

(எ) பதவிய ஆதார வைத்தியசாலையில் பிரதான 05 துறைகளுக்குரிய வைத்திய நிபுணர்கள் இல்லாமையின் காரணமாக மருத்துவ உபகரணங்கள், சிகிச்சை உபகரணங்கள், சத்திரசிகிச்சை இயந்திரம் மற்றும் துணைப்பாகங்களுடன் சத்திரசிகிச்சைக் கூடம், பிரசவகூடம் என்பவற்றை உள்ளடக்கிய கட்டிடம் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஏ) மொத்த கிரயம மதிப்பீடு தயாரிக்கப்படாமல், ரூபா 59.5 மில்லியன் தொகையான நிதிஏற்பாட்டின் அடிப்படையில், 2015 ஆம் ஆண்டின் போது, நிர்மாணங்கள் அங்கீகரிக்கப்பட்ட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பயிற்சி நிலையத்தின் வேலைகள் 2018 யூலை 10 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும், அந்த பயிற்சி நிலையத்திற்காக 2017 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 6,907,252 தொகையான தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் மின்சார உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஐ) வடமத்திய மாகாண ஆயுர்வேத வைத்தியசாலைக்குச் சொந்தமாகக் காணப்பட்ட 34 உத்தியோகபூர்வ இல்லங்களில் 31 இல்லங்களும் சரியான முறையில் பராமரிக்கப்படாமையின் காரணமாக பயன்பாடின்றிக் காணப்பட்டது.

## 6.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஓய்வு பெறுவதற்கு தீர்மானிக்கப்பட்ட மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் I ஆம் வகுப்பின் பெண் உத்தியோகத்தரொருவர், இலங்கை நிர்வாக சேவையின் II ஆம் தரத்தின் உத்தியோகத்தர் ஒருவராக சபை செயலாளரினால் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. அவ்வாறே அந்த பெண் உத்தியோகத்தருக்கு உரித்தான சம்பள அளவினை விட உயர்ந்த சம்பள அளவொன்று காண்பிக்கப்பட்டமையின் காரணமாக அந்த பெண் உத்தியோகத்தரின் மாதாந்த ஓய்வூதியத்தைப் போன்று ஓய்வூதிய பணிக்கொடையும் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது.

(ஆ) தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழுவின் கட்டளைகளுக்கும், காணப்படுகின்ற சட்ட விதிகளுக்கும் முரணாக அலுவலக பணி உதவி உத்தியோகத்தர்கள் இருவருக்கு பிரதான ஒழுங்கமைப்பு உத்தியோகத்தர் மற்றும் பிரதி ஒழுங்கமைப்பு உத்தியோகத்தர் என பதவிகள் வழங்கி 2012 ஏப்ரல் 10 ஆந் திகதி முதல் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் ரூபா 452,256 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) ஆளுநர் அங்கீகரித்த 2001 மே 03 ஆந் திகதிய 314/23 (1) ஆம் இலக்க கடிதத்தின் அடிப்படையில் தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5 ஆவது பந்திக்கு இணங்காத வகையில் மாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்களை உள்ளடக்கிய மாகாண சபையின் சகல செயலாளர்களிடமிருந்தும் பிரதி பிரதம செயலாளர்களிடமிருந்தும் மாதாந்தம் ரூபா 500 ஆகக் கூடியதன் கீழ் வீட்டு வாடகை அறவிடப்பட்டிருந்தது.

**6.7 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடு**

**(அ) பொலன்னறுவை தீப உயன அபிவிருத்தி செயற்திட்டம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பொலன்னறுவை தீப உயன அபிவிருத்தி செயற்திட்டத்திற்குரிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.3.1 இன் பிரகாரம் மொத்த கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அதற்காக பிரதம செயலாளரின் அங்கீகாரம் பெறப்படாதிருந்ததுடன் பிரதம அமைச்சினால் இந்த செயற்திட்டத்திற்குரிய மொத்தக் கிரயம் ரூபா 155,405,419 தொகையான 04 மதிப்பீடுகள் அவ்வவ்போது தயாரிக்கப்பட்டிருந்தது.

(ii) மலசலகூட முறைமையை நிர்மாணிப்பதற்காக தயாரிக்கப்பட்ட ரூபா 15 மில்லியன் தொகையான ஆரம்ப மதிப்பீட்டின் அடிப்படையில் நிர்மாண ஒப்பந்தத்தின் கீழ் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்வி கோரி தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரருக்கு நிர்மாணச் செயற்பாடுகள் கையளிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) விசேட நிர்மாண ஒப்பந்தக்காரராக நில அழகுபடுத்தலுக்காக (Landscaping) பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்வி கோர வேண்டி இருந்த நில அழகுபடுத்தலுக்காக தயாரிக்கப்பட்ட மொத்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 140,642,518 தொகையான 03 ஒப்பந்தங்கள் பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்காத வகையில் மேற்கூறப்பட்ட ஒப்பந்தகாரருக்கே கையளிக்கப்பட்டிருந்தது.

(iii) G.P.S Co-ordinator உபகரணத்தைப் பயன்படுத்தியும் அளத்தல் நாடாவைப் பயன்படுத்தியும் தீப உயன நிலத்தில் பாதிக்கப்பட்டிருந்த புற்பிடிகளின் பெறப்பட்ட அளவிடையின் பிரகாரம் சதுர அளவு 8,844.11 சதுர மீற்றராக இருந்தது. எனினும், கொடுப்பனவு செய்யப்பட்ட பட்டியலின் பிரகாரம் புல்பிடிகள் 10,211.01 சதுர மீற்றருக்காக ஒரு சதுர மீற்றருக்கு ரூபா 2,600 வீதம் செலுத்தப்பட்டமையால் புற்பிடிகளின் 1,366.90 சதுர மீற்றருக்காக ரூபா 3,553,940 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) வெலிக்கந்த சிங்ஹபுர நீர் உத்தேசத் திட்டம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) வெலிக்கந்த சிங்ஹபுர பிரதேசத்தின் மக்களின் குடிநீர் தேவையை நிறைவேற்றுவதற்காக 2013 ஆம் ஆண்டின் போது நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்ட வெலிக்கந்த சிங்ஹபுர குடிநீர் உத்தேசத் திட்டத்திற்காக மொத்தக் கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்படாமல் நீர்த்தாங்கி நிர்மாணிப்பதற்கு மாத்திரம் ரூபா 3,443,380 தொகையான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு இதனை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தகாரரைத் தெரிவு செய்வதறகு முறையான பெறுகைகள் திட்டமொன்று பின்பற்றப்படாதிருந்ததுடன் 2014 நவம்பர் 17 ஆந் திகதி ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(ii) 2013 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட இந்த செயற்திட்டத்தில் நீர்க் குழாய்களைப் பதிப்பதற்கான மதிப்பீடு தயாரித்தல் 2016 ஆம் ஆண்டின் போது இடம்பெற்றிருந்ததுடன் அது ரூபா 6,065,680 தொகையான மதிப்பீடாக இருந்தது. மழை காலத்திற்கு முன்னர் மிகவும் விரைவாக வேலையைப் பூர்த்தி செய்ய வேண்டியதாகக் காண்பித்து பெறுகை நடைமுறைகளுக்குப் புறம்பாக மாகாண அமைச்சரவைக் குறிப்பின் மூலம் பெறப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் அந்த ஒப்பந்தம் வேறொரு ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய இந்த ஒப்பந்தத்தின் வேலைகள் 2017 நவம்பர் 22 அந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) இந்த செயற்திட்டத்தின் எஞ்சிய வேலையைக் காண்பித்து ரூபா 8,421,000 தொகையான மதிப்பீடொன்று தயாரித்து அந்த ஒப்பந்தமும், இரண்டாவது கட்டத்தை நிறைவேற்றிய ஒப்பந்தகாரருக்கு கையளித்து 2017 திசெம்பர் 28 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட இந்த செயற்திட்டம் 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நலனாளிகளின் பாவனைக்கு வழங்கப்படாதிருந்ததுடன் வளர்ச்சியடைந்த பிரதேசத்தின் 350 குடும்பங்களுக்கு குடிநீரை வழங்குவதற்காக வெலிக்கந்த பிரதேச செயலாளரால் இந்தக் காலப்பகுதியில் ரூபா 1,227,450 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**(இ) கந்தக்காடுவ கனிஷ்ட வித்தியாலயத்தில் ஆசிரியர் விடுதி புனரமைத்தல்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கந்தக்காடுவ கனிஷ்ட வித்தியாலயத்தில் 02 ஆசிரியர் விடுதிகளை ரூபா 3,999,991 தொகையான மொத்த மதிப்பீட்டுப் பெறுமதியின் அடிப்படையில் திருத்தியமைப்பதற்காக 2016 திசெம்பர் 23 மற்றும் 29 ஆந் திகதிகளில் ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அந்த ஒப்பந்தகாரரைத் தெரிவு செய்வதற்காக சந்தை விலை ஒப்பீட்டு முறைமை பின்பற்றப்பட்டதாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக உறுதிப்படுத்தும் சான்றுகள் காணப்படவில்லை.

(ii) அந்த ஒப்பந்தங்கள் உரிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.9.3 (ஆ) இன் பிரகாரம் CIDA/SBD/03 ஆம் படிவத்தில் முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை.

(iii) 2016 திசெம்பர் மாதத்தின் போது திருத்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும், 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் வேலை பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் உரிய ஒப்பந்தகாரர் வேலையினை இடைநடுவில் நிறுத்தியிருந்தார். போக்குவரத்து வசதிகள் இன்றிய மிகவும் கஷ்டமான இந்த பாடசாலையில் சேவையாற்றுகின்ற ஆசிரியர்களுக்குத் தேவையான இந்த ஆசிரியர் விடுதிகளை நிர்மாணித்து வழங்குவதற்காக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் போதிளவான பிரகாரம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**(ஈ) பிரதம செயலகத்தின் சுற்றுலா விடுதியை திருத்தியமைத்தல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பிரதம செயலகத்தில் சுற்றுலா விடுதியை புனரமைப்பதற்கான ஒப்பந்தம் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 3,172,332 பெறுமதியில் ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப்பட்ட போதும் அதற்காக பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.9.3(ஆ) இன் பிரகாரம் முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ii) 2016 ஆகஸ்ட் 15 ஆந் திகதி ஆரம்பித்து 94 நாட்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய இந்த ஒப்பந்தத்தின் வேலைகளைப் பூர்த்தி செய்தல் 2017 மே 31 ந் திகதி வரையிலும் தாமதமாகியிருந்தது. எனினும், கால நீடிப்பு வழங்கப்பட்டமைக்கான சான்றுகள் ஒப்பந்தக் கோவையில் காணப்படாதிருந்ததுடன் கேள்வி ஆவணங்களின் பிரகாரம் தாமதமான 196 நாட்களுக்காக ரூபா 310,889 தொகையான தாமதக் கட்டணத்தையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) மிஹிந்தலை கால்நடை வைத்திய அலுவலக நிர்மாணம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ரூபா 05 மில்லியன் பெறுமதியை விட மேற்பட்ட நிர்மாணங்களுக்காக 108 ஒப்பந்தகாரர்கள் வடமத்திய மாகாணத்தில் பதிவு செய்திருந்த போதிலும், மாகாண விவசாய அமைச்சினால் கூறுவிலை கோருவதற்கு சிறப்புத் தேர்ச்சி முறையில் தெரிவு செய்யப்பட்ட 06 ஒப்பந்தகாரர்களிடமிருந்து மாத்திரம் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 6,155,584 தொகையான மிஹிந்தலை கால்நடை வைத்திய அலுவலகத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்திற்காக கூறுவிலை கோரப்பட்டிருந்தது.

(ii) தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரருடன் ரூபா 6,142,175 பெறுமதியில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் நிர்மாண நடவடிக்கைகள் 2017 ஏப்ரல் 18 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. எனினும், 2017 நவம்பர் 17 ஆந் திகதி வரையிலும் அந்த நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்படாதிருந்த போதும், அமைச்சின் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் பௌதீக முன்னேற்றம் 40 சதவீதமாக இருந்தது.

(iii) உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாணங்கள் நிறைவேற்றப்படாத போதும், 2017 மே 16 ஆந் திகதி காலாவதியாவதற்கு இருந்த ரூபா 307,109 தொகையான செயலாற்றல் காப்பீட்டின் செல்லுபடிக் காலத்தை நீடிப்பதற்கோ அல்லது அந்தப் பணத்தை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், நிர்மாணங்களைக் கைவிட்டிருந்த ஒப்பந்தகாரர்களைக் கறுப்புப் பட்டியலில் இடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**(ஊ) ஹத்தறுஸ்வெல மகா வித்தியாலயத்தில் மூன்று மாடிக் கட்டிட நிர்மாணமும் ஏனைய திருத்தங்களும்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.2.2 இன் பிரகாரம் தேசிய போட்டியாளர் கேள்வி கோரும் முறைமையின் கீழ் கேள்விதாரருக்கு கூறுவிலை சமர்ப்பிப்பதற்காக ஆகக் குறைந்தது 21 நாட்களான காலம் வழங்க வேண்டியிருந்த போதிலும், ''லங்கம பாசல ஹொந்தம பாசல'' செயற்திட்டத்தின் கீழ் ஹத்தறுஸ்வெல மகா வித்தியாலயத்தின் மூன்று மாடிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கும் ஏனைய திருத்தங்களுக்காகவும் நிர்மாண ஒப்பந்தத்திற்காக கேள்வி சமர்ப்பிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த காலம் 13 நாட்கள் மாத்திரமாக இருந்தது.

(ii) 2016 ஒக்தோபர் 12 ஆந் திகதி ரூபா 35,708,705 தொகையான (வற் உடன்) தொகைக்குரிய இந்த வேலை ஒப்பந்தத்திற்காக உடன்படிக்கை செய்யும் போது ICTAD/SBD/02 படிவத்தில் சகல விபரங்களுடனும் உடன்படிக்கை படிவம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(எ) பொலன்னறுவை பழுகஸ்தமன 2 ஆம் வாய்க்கால் சனசமூக மண்டப நிர்மாணம்**

பொலன்னறுவை பழுகஸ்தமன 2 ஆம் வாய்க்கால் சனசமூக மண்டபத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டம், வரையறுக்கப்பட்ட கூறுவிலை கோரி தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரருக்கு ரூபா 4,052,210 பெறுமதியில் கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் தயாரிக்கப்பட்ட இரண்டாவது மதிப்பீட்டின் பெறுமதி ரூபா 11,482,561 ஆக இருந்ததுடன் அதற்காக CIDA C-6 தரத்தின் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்துள்ள கேள்விதாரரிடமிருந்து கேள்வி கோராமல் CIDA C-7 தரத்தில் பதிவு செய்துள்ள முதலாவது ஒப்பந்தகாரருக்கே இந்த ஒப்பந்தம் பிரதம அமைச்சினால் கையளிக்கப்பட்டிருந்தது. பெறுகை வழிகாட்டிகளிலிருந்து விலகியமைக்கு 2017/145 ஆம் இலக்க அமைச்சரவைக் குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**(ஏ) மதவாச்சி ஸ்ரீ சோபித்த மஹா வித்தியாலயத்தில் கட்டிட நிர்மாணம்**

மதவாச்சி ஸ்ரீ சோபித்த மஹா வித்தியாலயத்தில் கட்டிடம் நிர்மாணிப்பதற்கு 2016 ஆகஸ்ட் 29 ஆந் திகதி ரூபா 26,508,384 தொகையில் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்காக ஒப்பந்தகாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 1,326,000 பெறுமதியான செயலாற்றல் பிணை போலி ஆவணமாக இருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் காரணமாக ஒப்பந்தகாரரை கறுப்புப் பட்டியலில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் இந்த செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**6.8 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் கிடைக்கப்பெறாத செயற்திட்டம்**

பிரதம அமைச்சினதும் மாகாண விவசாய அமைச்சினதும் மாங்கன்றுகள் பகிர்ந்தளிக்கும் செயற்திட்டத்திற்குரிய ரூபா 13,263,200 பெறுமதியான 33,158 மாங்கன்றுகள் 2015, 2016 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது பிரதம அமைச்சினாலும், ரூபா 2,550,000 பெறுமதியான அந்த வகையின் 6,000 மாங்கன்றுகள் 25 சதவீத இலாபப் பங்களிப்புடன் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது மாகாண விவாசாய அமைச்சினாலும் கொள்வனவு செய்யப்பட்டு

பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. அந்தக் கன்றுகளில் 50 சதவீதத்திற்கு அண்மித்த அளவு அழிவடைந்திருந்தமை களப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

## 6.9 பூர்த்தி செய்யப்படாத செயற்திட்டங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் கிராம அபிமானி வீடமைப்புத் திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது 17 பிரதேச செயலகப் பிரிவுகளில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட 55 வீடுகளில் 07 வீடுகள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிர்மாணிக்கப்படவில்லை.

(ஆ) மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் கிராம வீதிகளில் மதகுகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கீழ் 19 பிரதேச செயலகப் பிரிவுகளில் 37 மதகுகளை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1,500,000 தொகையான நிதிஏற்பாட்டில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,240,000 தொகை செலவில் 31 மதகுகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(இ) இரண்டாம் நிலை சுகாதாரம் சார்ந்த அபிவிருத்தி செயற்திட்டத்தின் (SHSDP) கீழ் 2013 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 566 மில்லியன் தொகையான நிதிஏற்பாடுகளில் ரூபா 269 மில்லியன் தொகையான 47 செயற்திட்டங்கள் 2018 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2017 ஆம் ஆண்டில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு தமுத்தேகம வைத்தியசாலைக்கு கையளிப்பதற்கு தயாராக இருந்த உடன்படிக்கைப் பெறுமதி ரூபா 56,056,567 தொகையான 02 வைத்தியர் உத்தியோகபூர்வ விடுதிகள் மற்றும் நீர்த்தாங்கி என்பன 2018 சனவரி 08 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்து வைத்தியசாலைக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.10 ஆரம்பிக்கப்படாத செயற்திட்டங்கள்

மாகாண சபை அபிவிருத்தி மானியத்தின் கீழ் 18 செயற்திட்டங்களுக்காக மாகாண விளையாட்டுத்துறைத் திணைக்களத்திற்கு ரூபா 1,716,326 தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.11 பதவியணி நிர்வாகம்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடமத்திய மாகாண சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினரின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**6.11.1 மாகாண சபை அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் பதவியணியினர்**

| | | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளவாறானது | மேலதிகம் | (குறைவு) |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 485 | 312 | 173 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 192 | 110 | 84 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 2,363 | 1,524 | 839 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 1,437 | 1,260 | 200 | 23 |
| (v) | ஏனையவை (சமயாசமய / தற்காலிக) | 12 | - | 12 | - |
| | | 4,489 | 3,206 | 1,308 | 25 |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண சபையின் பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்களை உள்ளடக்கிய நிறுவனங்களில் நீண்ட காலமாகக் காணப்பட்ட சிரேஷ்ட நிலையில் 173 பதவிகளையும், மூன்றாம் நிலையில் 84 பதவிகளையும், இரண்டாம் நிலையில் 839 பதவிகளையும், ஆரம்ப நிலையில் 200 பதவிகளையும் உள்ளடக்கிய 1,308 பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விளையாட்டுத்துறை திணைக்களத்தின் விளையாட்டு உத்தியோகத்தர்களின் ஒன்றிணைந்த சேவை தொடர்பான பிரமாணக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் பதவிக்காக உத்தியோகத்தர்களை பதிவியுயர்த்துதல் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இடம்பெற்றிருக்கவில்லை.

**6.11.2 பாடசாலைப் பதவியணியினர்**

| | | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளவாறானது | வெற்றிட எண்ணிக்கை | மேலதிகம் |
|---|---|---|---|---|---|
| (i) | அதிபர்கள் | 1,087 | 815 | 272 | - |
| (ii) | ஆசிரியர்கள் | 16,830 | 16,580 | 250 | - |
| (iii) | திட்டமிடல் மற்றும் நிதி உதவியாளர் / அபிவிருத்தி உத்தியோகத்தர்/ நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் / இரசாயனகூட உதவியாளர்/ விடுதிக் கண்காணிப்பாளர்கள் | 935 | 103 | 842 | 10 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (iv) | பாடசாலை அலுவலக உதவியாளர் / பாடசாலை காவலாளர் / சமையலாளர் / பாடசாலை தொழிலாளர் | 1,318 | 1,484 | 01 | 167 |
| (v) | ஏனையவை | -- | 11 | - | 11 |
| | | ---------- | --------- | ---------- | -------- |
| | | 20,170 | 18,993 | 1,365 | 188 |
| | | ==== | ==== | ==== | ==== |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண கல்வித் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை 16,830 ஆக இருந்த போதிலும், உள்ளபடியான எண்ணிக்கை 16,580 ஆனமையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 250 ஆகும். எனினும் உள்ளபடியான ஆசிரியர் எண்ணிக்கையில் 322 பேர் ஆசிரிய ஆலோசகர்களாகவும், 287 பேர் பதிற் கடமை அதிபர்களாகவும், 50 பேர் கல்விசாரா வேறு துறைகளிலும் நியமிக்கப்பட்டமையின் காரணமாக ஆசிரியர்களின் உள்ளபடியான வெற்றிட எண்ணிக்கை 909 ஆகக் காணப்பட்டது.

(ஆ) மாகாணத்தில் 06 கல்வி வலயங்களுக்குரிய 15 ஆசிரியர்கள் இராணுவ சேவையிலும், பல்வேறு அமைச்சுக்களில் உள்ளடங்கிய வேறு நிறுவனங்களுக்கும் நியமிக்கப்பட்டிருந்தனர். மாகாண சபையினால் அந்த ஆசிரியர்களுக்கு 2004 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலத்தில் சம்பளமாக ரூபா 14,946,015 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அதில் மீளளிப்புச் செய்யப்படாத தொகை ரூபா 12,516,699 ஆகக் காணப்பட்டது.

(இ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 கல்வி வலயங்களில் 469 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 02 கல்வி வலயங்களில் ஆசிரியர்களின் மிகை 219 ஆகும். இந்த நிலைமை சீராக்கப்படுமாயின் வெற்றிடங்களின் எண்ணிக்கையை 250 வரை குறைக்க முடியுமாக இருந்த போதிலும், கல்வி அதிகாரிகள் அதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் மாகாண பாடசாலைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட அதிபர்களின் எண்ணிக்கை 1,087 ஆக இருந்த போதிலும், உள்ளபடியான அதிபர்களின் எண்ணிக்கை 815 ஆனமையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 272 ஆகக் காணப்பட்டது. அதில் அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை வலயங்கள் இரண்டிலும் 23 பதவிகளில் மிகை காணப்பட்டதுடன் மிகுதி 06 வலயங்களிலும் 295 வெற்றிடங்கள் காணப்பட்டன.

(உ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பதிற் கடமை புரியும் அதிபர்களாக நியமிக்கப்பட்டிருந்த 287 ஆசிரியர்களில் 164 பேரும் கெப்பிட்டிகொள்ளாவ, கெக்கிராவ மற்றம் கலன்பிந்துனுவெவ வலயங்களின் ஆசிரியர்களாக இருந்தனர்.

(ஊ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பாடசாலை கல்விசாரா பதவியணியினரில் 843 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் மிகை 177 ஆகக் காணப்பட்டது. மிகைகளுக்கிடையே பாடசாலை அலுவலக உதவியாளர் 156 பேரும், காவலாளிகள் 11 பேரும் மற்றும் ஆய்வுகூட உதவியாளர் 10 பேருமாகக் காணப்பட்டனர்.

(எ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கோட்டக் கல்வி அலுவலகங்களில் பதவியணியினர்களின் வெற்றிடம் 83 ஆகவும் மிகை 4 ஆகவும் காணப்பட்டன. அங்கீகரிக்கப்பட்ட முழுமையான முகாமைத்துவ உதவியாளர் பதவிகளில் 60 வெற்றிடங்கள் காணப்பட்ட போதும் எந்தவொரு உத்தியோகத்தரும் சேர்க்கப்படாமையினால் இந்த நிலைமை கோட்டக் கல்வி அலுவலகங்களின் செயலாற்றல் குறைவடைவதற்கு நேரடியாகத் தாக்கமளித்திருந்தது.

(ஏ) மாகாணக் கல்வித் திணைக்களத்தால் 50 ஆசிரியர்களுக்கு 01 மாதம் முதல் 25 வருடங்கள் வரையிலான காலம் திணைக்களத்தின் நோக்கங்களுக்குரிய கட்டாய கற்பித்தல் செயற்பாடுகளிலிருந்து அகற்றப்பட்டு வேறு நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் விடுவிக்கப்பட்ட 45 ஆசிரியர்களுக்குச் செலுத்தப்பட்ட சம்பளம் மற்றம் படிகளின் கூட்டு மொத்தம் ரூபா 132,092,401 ஆகும்.

(ஐ) 2004 திசெம்பர் 01 ஆந் திகதி முதல் 2014 சனவரி 02 ஆந் திகதி வரை வேறு நிறுவனத்திற்காக கடமைகளுக்காக விடுவிக்கப்பட்ட மாகாண கல்வித் திணைக்களத்தின் உதவி ஆசிரியர் ஒருவருக்கு அந்த கால எல்லைக்காக சம்பள அதிகரிப்பு உழைத்துக் கொள்வதற்கு பூர்த்தி செய்யப்பட வேண்டிய விடயங்கள் பூரணப்படுத்தப்படாதிருந்த போதும் சகல சம்பள அதிகரிப்புக்களுடன் ரூபா 2,415,691 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே பதிவியுயர்வு வழங்கும் போது பூர்த்தி செய்யப்பட வேண்டிய எந்தவித நியதிகளும் பூர்த்தி செய்யாதிருக்கும் போது இந்த உத்தியோகத்தர் 2014 யூலை 01 ஆந் திகதி முதல் இலங்கை ஆசிரியர் சேவையின் 1 ஆம் தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்டிருந்தார்.

**6.11.3 வைத்தியசாலைப் பதவியணியினர்**

| | | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளவாறான எண்ணிக்கை | வெற்றிட எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i.) | விசேட மருத்துவர்கள் | 21 | 21 | - | - |
| (ii.) | ஏனைய மருத்துவர்கள் | 397 | 464 | 01 | 68 |
| (iii.) | பதிவு செய்யப்பட்ட மருத்துவர்கள் | 44 | 34 | 10 | - |
| (iv.) | குறைநிரப்பு மருத்துவர்கள் | 1,100 | 787 | 313 | - |
| (v.) | தாதியர் | 621 | 632 | 22 | 33 |
| (vi.) | தொழில்நுட்பச் சேவை (மருந்தாளர், பொதுசன சுகாதார கள உத்தியோகத்தர்கள்) | 230 | 165 | 69 | 04 |
| (vii.) | சுகாதார சிற்றூழியர் (கனிஷ்ட) | 394 | 696 | - | 302 |
| (viii.) | சுகாதார சிற்றூழியர் (சாதாரணம்) | 363 | 162 | 201 | - |
| (ix.) | சௌக்கிய உதவி வழங்குநர்கள் அடங்கலாக ஏனைய ஊழியர்கள் | 687 | 575 | 112 | - |
| | மொத்தம் | 3,857 | 3,536 | 728 | 407 |

மாகாண சுகாதார திணைக்களத்தில் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட 394 சுகாதாரப் பணி உதவியாளர்களின் (கனிஷ்ட) எண்ணிக்கையை மிகைத்து 302 பேர் சேர்க்கப்பட்டிருந்தனர். எனினும், அந்த ஊழியர்களின் நிர்வாகப் பிரிவின் நடவடிக்கைகளை உள்ளடக்கிய பல்வேறு பணிகளில் ஈடுபடுத்தியதன் காரணமாக சுகாதாரப் பணி உதவியாளர்களின் (கனிஷ்ட) கடமைகள் வெளி சுத்திகரிப்பு சேவை நிறுவனத்திலிருந்து நிறைவேற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 02 சுத்திகரிப்பு சேவை நிறுவனங்களின் 138 ஊழியர்களுக்காக 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ரூபா 144,552,476 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 6.12 வங்கிக் கணக்குகள்

மாகாண கல்வித் திணைக்களத்தின் 09 வங்கிக் கணக்குகளுக்குரிய பெறுமதி ரூபா 3,501,114 தொகையான இனங்காணப்படாத 92 பெறுவனவுகள் மற்றும் 02 வங்கிக் கணக்குகளுக்குரிய பெறுமதி ரூபா 2,139,222 தொகையான இனங்காணப்படாத 02 கொடுப்பனவுகள் என்பவற்றை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 7. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 7.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மாகாண சபையின் அமைச்சுகள், திணைக்களங்கள் அடங்கலாக 34 நிறுவனங்கள் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டங்களைத் தயாரித்திருக்கவில்லை.

## 7.2 பெறுகைத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் மாகாண சபையின் 35 அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களில் 34 இன் பெறுகைத் திட்டங்கள் 2017 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 7.3 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

2016 மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 7.4 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வு பந்திகள் தொடர்பான அவதானிப்புக்கள்

7.4.1 2016 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் காண்பிக்கப்பட்ட பந்திகளில் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த பந்திகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) மாகாண அமைச்சுக்கள் / 03 திணைக்களங்களுக்குரிய தீர்க்கப்படாதிருந்த ரூபா 26,788,954 தொகையான கட்டுநிதி மீதி 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் கொண்டுவரப்பட்டிருந்தமை.

(ஆ) மாகாண சபையின் அமைச்சுக்கள், உறுப்பினர்கள் மற்றும் ஆளுநர் அடங்கலாக 34 பேர்களுக்காக அமுலாகிய திடீர் விபத்து மற்றும் சுகாதார எனும் பிரத்தியேகக் காப்புறுதி திட்டத்திற்கு நலன்பெறுநர்களிடமிருந்து பணம் எதுவும் அறவிடப்படாது

மாகாண சபை நிதியத்திலிருந்து 2013 முதல் 2015 வரை ரூபா 6,073,748 மற்றும் 2016 ஆம் ஆண்டின் பொருட்டு ரூபா 3,300,196 எனக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை.

(இ) தலைமைச் செயலகத்தால் 2016 சனவரி முதல் யூலை 21 வரையான காலப்பகுதியின் போது புதினப் பத்திரிகைகளில் பிரசுரங்களை வெளியிடுவதற்காக முகவர் நிறுவனம் உன்றினது சேவையைப் பெற்று அதன் பொருட்டு ரூபா 1,196,244 மேலதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.

(ஈ) 25,000 ஊர்க் கோழிக் குஞ்சுகளை கொள்வனவு செய்வதற்காக குறைந்த கூறுவிலையை குறிப்பிட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட கூறு விலைக்குத் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவால் தீர்வுடனும் முறையானதுமான பரிந்துரைகள் வழங்கப்படாததால் மாகாண விவசாய அமைச்சினால் அக்கேள்விகளை நிராகரித்து அதனை விட கோழிக் குஞ்சொன்றினது விலை ரூபா 80 அதிகரிப்புடன் கூறுவிலையைச் சமர்ப்பித்திருந்த வழங்குநருக்கு குறித்த ஒப்பந்தத்தை வழங்கியதன் காரணமாக ஏற்பட்ட இழப்பு ரூபா 2,000,000 ஆன இருந்தமை.

7.4.2 2010 ஆம் ஆண்டின் போது மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் வெள்ளத்தால் பாதிப்பிற்கு உள்ளாகிய வீதிகளை மீளமைக்கும் போது மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,170 மில்லியன் தொகையை பதிவழிக்குமாறு அரச கணக்குகள் செயற்குழுவினால் வழங்கப்பட்ட கட்டளை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 7.5 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைந்து கொள்ளும் வகையில் அந்த நோக்கங்களை அடைவதற்கு பயணிக்கும் போது அடையப்பட வேண்டிய இலக்குகளையும், அந்த இலக்குகளை அடைந்து கொள்வதற்காக காணப்படுகின்ற இடைவெளிகளின் முன்னேற்றத்தை அளவீடு செய்வதற்கான பொருத்தமான குறிகாட்டிகளும் மாகாண சபையினால் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## 8. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது மாகாண சபையின் நிறுவனத் தலைவர்களிற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | முறைமையின் குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) | வருமான நிர்வாகம் | முறையான மதிப்பீடு தயாரிக்கப்படாமை |
| (ஆ) | ஒப்பந்த நிர்வாகம் | பெறுகை வழிகாட்டி பின்பற்றப்படாமை மற்றும் சரியான மேற்பார்வையின்மை |
| (இ) | நிலையான சொத்துக்கள் | சில நிலையான சொத்துக்கள் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்படாமை |
| (ஈ) | நிதியத்தின் பயன்பாடு | நிதியம் உச்ச அளவில் பயன்படுத்தப்படாமை |

| | | |
|---|---|---|
| (உ) | மனிதவள முகாமைத்துவம் | (i) ஆட்சேர்க்கும் நடைமுறை முறையற்றதாக இருந்தமை<br>(ii) ஊழியர் வெற்றிடங்கள் நிரப்பப்படாமை |
| (ஊ) | செயற்திட்ட முகாமைத்துவத்தை செயற்படுத்துதல் | திட்டமிடப்பட்ட செயற்திட்டம் அமுல்படுத்தப்படாமை |
| (எ) | களஞ்சியக் கட்டுப்பாடு | இருப்புப் புத்தகம் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாமை |